DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -151/2024

Prosecution PW - 24

| | | | |
|---|---|---|---|
| Name | டாக்டர். பூவரசன் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 04.03.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 Present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரிமருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில்உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2024ம்தேதியன்று பணியில் இருந்தபோது சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஜெயகுமார் என்ற ஆண் சடலத்தின் பிரேத பரிசோதனை செய்ய வேண்டி அய்யம்பேட்டை காவல்நிலைய ஆய்வாளர் குற்ற எண் 202/2024 வழக்கில் சம்பந்தப்பட்ட மேற்படி சடலத்தின் பிரேத பரிசோதனை செய்ய கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன் அவர்கள் மூலம் பெற்று அவரால் சடலம் அடையாளம் காட்டப்பட்டது. நான் அன்றைய தினம் பகல் 1.40 மணிக்கு பிரேத பரிசோதனை தொடங்கினேன். சடலம் உடல் முழுவதும் விரைப்பு தன்மையுடன் காணப்பட்டது. உடலில் இரத்த தோய்வுடன் கூடிய காவி நிற கைலி அதீத இரத்தக்கரையுடன் கூடிய சந்தன அரை கை சட்டை மற்றும் நீல நிற ராம்ராஜ் உள்ளாடை காணப்பட்டது.

<u>பிரேத பரிசோதனையில் காணப்பட்ட வெளிபுற தோற்றங்கள்</u>

நல்ல உடல்வாகுடன் கூடிய சமச்சீர் உடைய மாநிறம் உடைய ஆணின் இறந்த உடல் காணப்பட்டது. பிண நிற மாறுபாடு நிலையாக உடல்பின்பக்கத்தில் காணப்பட்டது. இரத்த தோய்வுடன் கூடிய நுரை வலது பக்க நாசிதுவாரத்தில் காணப்பட்டது. இடது காலில் இரண்டாவது மற்றும் மூன்றாவது விரல்கள் மருத்துவ சிகிச்சையினால் அகற்றப்பட்டு பழைய காய சுருக்கம் காணப்பட்டது. பகுதியளவு ஆறிய புண் இடது காலில் முன் பாத பகுதியில் காணப்பட்டது. இடது காலின் நான்காவது விரலில் பூஞ்சை தொற்று பாதிக்கப்பட்டு கருப்பு நிறத்தில் கடினமாக தோலாக காணப்பட்டது. இதய வடிவில் அம்பு எய்திய பச்சை குத்திய குறியீடு இடது முழுங்கையின் உட்புற பகுதியில் காணப்பட்டது. சின்னம்மை தடுப்புஊசி தழும்பு இடக்கை புஜத்தில் காணப்பட்டது.

<u>இறப்பிற்கு முந்தைய காயங்கள்</u>

அடர்சிவப்பு நிற சிராய்ப்பு காயங்கள் பின்வரும் அளவுகளில் உடலின் பாகங்களில் காணப்பட்டது. 4X4 cm, இருப்பு பாதை வடிவத்தில் நீள்கோட்டு பக்க வாட்டு கீறல்கள் பரவலான வீக்கத்துடன் இடது பக்க நடுமண்டை ஓட்டு தோல் முகட்டிலும் காணப்பட்டது.

3x1/2 செ.மீ இடது பக்க பின் மண்டை ஓட்டு தோலிலும், 3X0.5 cm, இடது கண் வெளிபுறத்திலும், பரவலான வீக்கம் வலது பக்க கன்னத்திலும், பரவலான வீக்கம் கழுத்தின் முன் பக்கத்திலும், 5X0.5 cmx எலும்பு வரை ஆழம் உள்ள கிழிந்த காயம் இடது நடு மண்டை ஓட்டு தோல் முகட்டில், இடைவெளியுடன் ஒழுங்கற்று காணப்பட்டது.

<u>தலை திறந்து பார்க்கையில் அடர்சிவப்பு நிற கன்றிய காயம் பின்வரும் அளவுகளில் காணப்பட்டது</u>.

1. 9 x7 cmx எலும்பு வரை ஆழ வலது பக்கவாட்டு பொட்டு தசையிலும்,
2. 9 x1 cm x தோல்வரை ஆழ வலது முன் பக்க மண்டை ஓட்டு தோலிலும்,
3. 10 x1 cm x தோல் வரை ஆழ முன் புற நடுபகுதி மண்டை ஓட்டு தோலிலும்,
4. 11 x1 cm x தோல் வரை ஆழமுள்ள இடது பக்க முன் மண்டை ஓட்டு தோலிலும்,
5. 10 x1 cm x தோல்வரை ஆழ இடது பக்க முன் மண்டை ஓட்டு தோலிலும்,
6. 10 x1 cm x தோல்வரை ஆழ இருப்பு பாதை வடிவத்தில் நீள்கோட்டு பக்கவாட்டு கன்றிய காயம் இடது முன் மண்டை ஓட்டு தோலிலும்,
7. 6 x1 cm x எலும்பு வரை ஆழ இடது பக்க வாட்டு பொட்டு தசையிலும் காணப்பட்டன. இதில் எண் 4,5,6, உடைய கன்றிய காயங்கள் குறுக்காக ஒன்றோடு ஒன்று பிணைந்து காணப்பட்டன. மண்டை ஓட்டு எலும்புகள் இயல்பாக காணப்பட்டன. மண்டை ஓட்டு ஜவ்வு இயல்பாக காணப்பட்டன. மூளை மிருதுவாக வீக்கத்துடன் காணப்பட்டன. இதன் குறுக்கு வெட்டு தோற்றம் இயல்பாக காணப்பட்டன. மூளை தண்டு மற்றும் மண்டை ஓட்டின் பகுதி இயல்பாக காணப்பட்டன.

மார்வை திறந்து பார்க்கையில் - மார்பு மற்றும் விலா எலும்புகள் இயல்பாக காணப்பட்டன. இருதயம் - தடினமாக காணப்பட்டது. இதன் குறுக்குவெட்டு தோற்றத்தில் 1.8 செ.மீ அளவில் இடது கீழ் அறை தசைகள் பருத்து காணப்பட்டன. இதய வால்வுகள் தடித்து உப்பு படிமத்துடன் காணப்பட்டது. கொரனரி தமனிகள் இயல்பாக காணப்பட்டது. இருதய பெருந்தமனியில் கொழுப்பு படிமங்கள் அடி வேரில் காணப்பட்டது. நுரையீரல்கள் பெரிய அளவில் காணப்பட்டது. இதன் குறுக்கு வெட்டு தோற்றத்தில் இளஞ்சிவப்பு நிறத்தில் நுரையுடன் கூடிய திரவம் காணப்பட்டது. வயிற்று பகுதியை திறந்து பார்க்கையில் வயிற்று உள்ளுறை குழி இயல்பாக காணப்பட்டது. இரைப்பையில் குறிப்பிட்ட வாசனை ஏதும் இல்லாமல் 1500 கிராம் சமைத்த சோறுடன் மஞ்சள் நிற திரவம் காணப்பட்டது. இதன் ஜவ்வில் சிறு சிறு புள்ளி இரத்த கசிவு காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் இயல்பாக காணப்பட்டன. குறுக்கு வெட்டு தோற்றம் இரத்த தோய்ந்து காணப்பட்டது. சிறுகுடலில் குறிப்பிட்டவாசனை ஏதும் இல்லாமல் 38 மில்லி மஞ்சள் நிறமுள்ள உணவு சாறு காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக காணப்பட்டது. இடுப்பு எலும்பு தண்டு வட முள் எலும்பு நெடு வரிசை வெளிப்புற பிறப்பு உறுப்புகள், இயல்பாக காணப்பட்டன.

கழுத்தை திறந்து பார்க்கையில் நாவடி எலும்பு, குரல்வளை குருத்தெலும்பு, இயல்பாக காணப்பட்டது. அடர்சிவப்பு நிற கன்றிய காயம் உட்புற கழுத்தின் தோலின் முன் நடு பகுதியில்காணப்பட்டது. அதீத இரத்த கசிவு முன் புற நடு மற்றும் அடி பகுதி கழுத்து பகுதியிலும், குரல்வளை பகுதி சுற்றிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது முன் பக்க தண்டு வட பகுதியிலும், முன் பக்க கேடய சுரப்பி குறுத்தெலும்பிலும், குரல்வளை குருத்தெலும்பு முன் எலும்பிலும், இருபக்க Sternocleidomastoid தசையின் நடு மற்றும் அடி பகுதியிலும், மேலும் முன் மற்றும் நடுபகுதி கழுத்தின் தசை பகுதியிலும் காணப்பட்டன. கேடய சுரப்பியின் இடது பக்க மேற்பகுதி குறுத்தெலும்பு உட்புறமாக சீரற்று முறிந்து இரத்த கசிவுடன் காணப்பட்டன. இரசாயன பகுப்பாய்விற்கு உடல் உள்ளுறுப்புகள் சேகரம் செய்து அனுப்பட்டுள்ளது. இரத்தம் தோய்ந்த கட்டு துணி இரத்த வகை கண்டறிய அனுப்பட்டுள்ளது. இருதயம், கல்லீரல்,சிறுநீரகம், நுரையீரல், கழுத்து தசை மற்றும் மூளை இவற்றின் சிறு துண்டுகள் நோய் குறியீயல் பரிசோதனைக்கு அனுப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை சரியாக பிற்பகல் 3.00 மணிக்கு முடிந்தது. இறப்பானது தோராயமாக பிரேத பரிசோதனைக்கு 12.00 மணியிலிருந்து 24 மணி நேரத்திற்கு முன்பாக நடந்திருக்கலாம். உடலில் உள்ள காயங்கள் இறப்பதற்கு 0 விலிருந்து 12 மணி நேரத்திற்கு இறப்பதற்கு முன்பு நடந்திருக்கலாம். இரசாயன பகுப்பாய்வு அறிக்கை மற்றும் நோய் குறியீயல்அறிக்கைக்காக இறுதி கருத்துரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இறுதி கருத்துரை

பிரேத பரிசோதனை அறிக்கை, நோய் குறியீயல் அறிக்கை, மற்றும் இரசயான பகுப்பாய்வு அறிக்கை ஆகியவற்றை கவனமாக ஆராய்ந்து பின் இறந்தவர் கழுத்தின் முன்புறத்தில் ஏற்பட்ட ஊடுருவாத மழுங்கிய விசை காயத்தினால் மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்திருக்க கூடும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பரிசோதனை அறிக்கை அதசாஆ **15**, உடல் உள்ளுறுப்பு இரசயான அறிக்கை அதசாஆ **16**, நான் வழங்கிய இறுதி கருத்துரை அதசாஆ **17**.

குறுக்கு விசாரணை **1** வது எதிரி தரப்பில்

இறந்து போன நபருக்கு மேற்கண்ட காயங்கள் கார் விபத்தில் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை மற்ற எதிரிகள் தரப்பில்

இல்லை

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,

இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்